செவிச்செல்வம்

# "Diploma in Community Radio & Mass Communication"

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

## CHAPTER 3 - RESEARCH AND ANALYSIS FOR COMMUNITY RADIO

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# INTRODUCTION TO MEDIA RESEARCH

## சமுதாய வானொலியைத் தொடங்குவதற்கான ஊடக ஆராய்ச்சிகள் அறிமுகம்

CHAPTER 3

EPISODE-11

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# அறிமுகம்: ஊடக ஆராய்ச்சி:

- சமுதாய வானொலி குழுவின் முக்கிய நோக்கம் சமூகத்தைப் பற்றியும் மற்றும் அவற்றின் தேவைகளைப் பற்றியும் தெரிந்து கொள்வது தான்.

- ஒரு சமூகத்தின் குணங்களைப் பற்றி தெரிந்து கொள்ள ஆராய்ச்சியும் பகுப்பாய்வும் இன்றியமையாதது.

- ஆராய்ச்சி செய்வதற்கு பல்வேறு ஊடக ஆராய்ச்சிக் கருவிகள் தேவை.அக்கருவிகளைப் பற்றியும் அதைபயன்படுத்தும்முறைகளைபற்றியும் தெரிந்து கொள்வது அவசியம்.

- ஊடக ஆராய்ச்சியில் முதற்கட்டமாக ஊடகங்களின் வளர்ச்சி என்ன,அவற்றின் சாதனைகள் என்ன, அவற்றின் தாக்கம் என்ன என்பதை அறிய வேண்டும்.

# அறிமுகம்: ஊடக ஆராய்ச்சி:

- ஆராய்ச்சி செய்வதற்கு முக்கிய மூலதனம் தகவல். ஊடக ஆராய்ச்சி செய்வதற்கு தேவைப்படும் தகவலை பெற மீண்டும் ஊடகங்களை நாட வேண்டும்.
- செய்தித்தாள், பத்திரிகை, வானொலி, சினிமா மற்றும் பிற வெகுஜன ஊடகங்களை பயன்படுத்தி பல வகையான மற்றும் பலவிதமான தகவலை சேகரித்து பகுப்பாய்வு செய்ய வேண்டும்.
- சேகரித்த தகவலை வைத்து இரண்டு விதமான ஆராய்ச்சியை செய்ய வேண்டும். முதலாவதாக ஊடகங்களைப் பற்றி பல்வேறு கோணங்களில் ஆராய வேண்டும்.
- இரண்டாவதாக ஊடகங்களை பயன்படுத்தும் மக்களை பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.
- ஊடகங்களை ஆராய்ச்சி செய்கையில் பல்வேறு கோணங்களில் ஆராய வேண்டும்.

# ஊடகங்கள் ஆராய்ச்சியில் பல்வேறு கோணங்கள்

1. ஊடகங்களின் தன்மை என்ன?
2. ஊடகங்கள்  செயல்படும் முறை என்ன?
3. அதில் பயன்படுத்தும் தொழில்நுட்பம் என்ன?
4. பல்வேறு ஊடகங்களுக்கு இடையே உள்ள ஒற்றுமை மற்றும் வேறுபாடுகள் என்ன?
5. ஊடகங்களின் சேவைகள் என்ன?
6. அதன் செயல்பாட்டு செலவு என்ன?
7. அதன் பயன்பாடு மற்றும் அணுகல் என்ன ?

# ஊடகங்கள் ஆராய்ச்சியில் பல்வேறு கோணங்கள்

ஊடகங்களிலிருந்து தகவலைச் சேகரித்தப்பின் ஊடகங்களை பயன்படுத்தும் மக்களைப் பற்றியும் ஊடகங்களின் பயன்களைப் பற்றியும் தகவலை சேகரிக்க வேண்டும்.

- ஊடகங்களை மக்கள் எவ்வாறுபயன்படுத்துகிறார்கள் என்பதை பற்றி ஆராய்வது அவசியம்.
- அதாவது சிலர் தகவல் பரிமாற்றம் செய்வதற்காக பயன்படுத்துவர்.
- சிலர் கல்வி கற்க பயன்படுத்துவர்.

**<u>சமுதாய வானொலிக்கான அடிப்படை ஆய்வு:</u>**

**அடிப்படை ஆய்வு என்றால் என்ன ?**

- அடிப்படை ஆய்வு என்பது ஒரு திட்டத்தின் தாக்கத்தை வரையறுக்க நடத்தப்படுகிறது. அடிப்படை ஆய்வு ஒரு திட்டத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு செயல்பாட்டின்போது நடத்தப்படுகிறது.

**ஆய்வை எப்படி மேற்கொள்வது?**

- சமுதாய வானொலி உரிமைதாரர் ஒலிபரப்பு மண்டலத்தில் வசிக்கும் மக்களில் ஐநூறு பேரை தேர்ந்தெடுத்து அவர்களிடம் அடிப்படை ஆய்வை நடத்த வேண்டும்.

# ஆய்வின் முக்கிய நோக்கங்கள்:

1. ஒரு சமுதாய வானொலி உரிமைதாரர் சமூகத்தைப் பற்றி புரிந்து கொள்வது அவசியம் விருப்பங்களை நிர்ணயிப்பது முக்கியம்.

2. சமூகத்தில் வானொலிப் பெட்டி எத்தனை பேர் பயன்படுத்துகிறார்கள் என்பதை அறிவது அவசியம்.

3. வானொலி நிகழ்ச்சிகள் மக்களின் தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்கிறது என்பதை அறிந்து கொள்வது அவசியம்.

4. ஊடக இடைவெளி பகுதிகள் என்ன? அதாவது ஊடகங்களை பயன்படுத்தாத மக்கள் எவ்வாறு ஊடகங்களிடம் இருந்து துண்டிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

5. உள்ளூர் மக்களை வானொலி நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்தும் பொருட்டு அந்த பகுதியை சார்ந்த மக்களின் நிபுணத்துவம் மற்றும் திறமையை கண்டறிதல்.

6. வானொலி நிகழ்ச்சிகளில் தயாரிப்பு மற்றும் ஒளிபரப்பில் எந்த அளவிற்கு சமூகம் ஆர்வமாக பங்கேற்கும் என்பதை அறிதல்.

**ஆய்வைக்கொண்டு என்ன செய்வது?**

1. கணக்கெடுப்பை வைத்துக்கொண்டு மக்கள்தொகையை ஆய்வு செய்ய முடியும்.

2. மக்களின் ஊடக தேவைகளை புரிந்து கொள்ள முடியும்.

3. ஊடக இடைவெளியை கண்டறிய முடியும்.

# ஆய்வின் முக்கிய நோக்கங்கள்:

- உரிமத்திற்கு விண்ணப்பிப்பதற்கு முன்பாகவே இந்த ஆய்வுகளை மேற்கொள்வது விரும்பத்தக்கது.
- அத்துடன் உள்ளூர் வரைபடம் உள்ளூர் தொழில்கள், தொழிற்சாலைகள் மற்றும் சிறப்பு திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்க வேண்டும்.
- பிராந்தியத்திற்கு தொடர்புடைய நிகழ்ச்சி வாயிலாக தற்போது நிலவக்கூடிய ஊடக இடைவெளிகளை கண்டறிய இந்த கணக்கெடுப்பு ஏதுவாக இருக்கும்.

**ஆராய்ச்சியின் முக்கிய அம்சங்கள்:**

- ஆராய்ச்சி என்பது படிப்படியாக திட்டமிடப்பட்ட செயல் முறை கொண்டது மற்றும் கவனமாக வடிவமைக்கப்பட்ட நடைமுறைகளை கொண்டது.
- அனைத்து ஆராய்ச்சி ஆய்வுகளும் பின்வரும் பண்புகளை கொண்டுள்ளது.

1. ஆராய்ச்சி நோக்கத்தைக் கொண்டதாகும். அந்த நோக்கம் சரிபார்க்க படக் கூடியதாக இருக்க வேண்டும். சேகரிக்கப்பட்ட தகவல் சோதனை மற்றும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

# ஆராய்ச்சியின் முக்கிய அம்சங்கள். . .

2. ஆராய்ச்சி ஒரு அனுபவ வழிமுறையை கொண்டது. ஆராய்ச்சி அனுபவ ஆதாரங்களை அடிப்படையாக கொண்டது. காணக்கூடிய ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, அனுபவம் மூலம் ஆய்வு செய்து சரிபார்க்கக கூடிய பிரச்சனைகளில் கவனம் செலுத்துகிறது.

3. ஒரு சமுதாய வானொலி நிலையத்திற்கான ஆராய்ச்சி நடத்துவதன் மூலம் அவ் வானொலி அமைப்பதற்கான பிரதான நோக்கங்களை கண்டறிய முடியும்.

4. ஆராய்ச்சி நல்ல நோக்கத்தை கொண்டதாக இருக்க வேண்டும், அது கவனமாக திட்டமிடப்பட்டு சரியான நேரத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.

5. ஆராய்ச்சியாளர் தொலைநோக்கு பார்வையாளராக வேண்டும். எல்லாவற்றையும் மிகத் துல்லியமாக திட்டமிடவேண்டும். ஆராய்ச்சி செயல்முறையில் ஒரு திறந்த மனமும் தெளிவான நோக்கமும் கொண்டு இருக்க வேண்டும்.

6. நோக்கங்கள், கருதுகோள்கள் மற்றும் செயல் முறைகள் ஆகியவை முன்னதாகவே தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

# ஆராய்ச்சியின் கோட்பாடுகள் என்ன?

- ஒரு உண்மையை சரிபார்த்த பின்னரே அதை ஏற்றுக்கொள்ள முடியும். அப்போதுதான் ஆராய்ச்சி நம்பகத் தன்மை பெறும்.
- ஆராய்ச்சி என்பது ஒரு தொழில்முறை முயற்சியாகும். இதற்கு தேவையானது முறையான, துல்லியமாக, ஆராய்ச்சி ஆய்வுகளை நிபுணத்துவம் கொண்டு கையாளுதல் வேண்டும்.
- தகவல் முறையாக திட்டமிடலின் மூலமே சேகரிக்கப்பட வேண்டும். தகவல் சேகரிப்பு நடைமுறைகள் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது. தகவலை கடுமையான பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும். எந்த அனுமானங்களையும் தெளிவான மற்றும் துல்லியமானமொழியில் எடுத்துரைக்க வேண்டும்.
- ஒரு நல்ல ஆராய்ச்சி ஆய்வு உண்மைகள் மீது கவனம் செலுத்த வேண்டும். எண்ணிக்கை அடிப்படையிலான உண்மைக்கும் மற்றும் தரத்தின் அடிப்படையிலான உண்மைக்கும் இடையே சமநிலையை அடைய செய்ய வேண்டும்.
- ஒரே நோக்கத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட விளக்கம் மற்றும் மதிப்பீட்டு முறைகள் மூலம் ஒரு பரந்த சூழலில் ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொள்ள முடியும்.

# கண்காணிப்புக்கான ஆராய்ச்சி

- ஒரு சமுதாய வானொலி நிலையம் எவ்வாறு செயல்படுகிறது என்பதை நிர்ணயிப்பதற்கு மற்றும் சமுதாய வானொலிக்கு மக்களிடையே வரவேற்பு எவ்வாறு இருக்கிறது என்பதை தெரிந்துகொள்ள ஆய்வை மேற்கொள்வதற்கு நிறைய காரணங்கள் உள்ளன:

1. ஆராய்ச்சி கடுமையாகவும் விமர்சன ரீதியாகவும் யோசிக்க உதவுகிறது.

2. ஆராய்ச்சி செயல்முறை மூலம் செயற்குழு எதிர்நோக்கும் கேள்விக்கான பதில்களை கண்டறிய முடியும்.

3. தொழில்முறை வளர்ச்சிக்கு தேவைப்படுகிற புதுமையான கருத்துக்களை ஆராய்ச்சி வழங்குகிறது.

4. ஆராய்ச்சியாளர் வானொலி நேயர்களின் நிகழ்ச்சி விருப்பங்களையும் மற்றும் நிகழ்ச்சி அட்டவணையில் தொடர்புடைய நன்மைகளை புரிந்து கொள்ளவும் முடியும்.

5. வானொலியில் ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளில் இது பலனளிக்கிறது, எது பலன் அளிக்கவில்லை என்பதை தெரிந்து கொள்ள ஆராய்ச்சி ஒரு படிப்பினையாக இருக்கிறது.

6. சமுதாய வானொலியின் எல்லையை விரிவாக்கம் செய்வதற்கு தேவைப்படும் உத்திகளை ஆராய்ச்சி மூலம் பரிந்துரைக்கப்படுகிறது.